REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 30உ செவ்வாய் (12—4—55) ★ ★ வெளியீடு: பங்குனி 31உ புதன் (13—4—55) [இதழ் 257

விலைகளைக் கட்டுப்படுத்த

ம. சோ. கட்சி கிளர்ச்சி செய்யும்?

விளை பொருள், ஆலைப் பொருள் விலைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை நீக்கி, அவ்விலைகளைச் சமமாக அமைப்பதற்குக் கிளர்ச்சி நடத்த ஏற்பாடு செய்யும்படி தனது கிளைக் கட்சிகளிடம் கேட்டுக்கொண்டு, ம. சோ. கட்சி நிர்வாகக் குழு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளதாம்.

காங்கிரசுக்கு தாண்டன் தலைமுழுக்கு!

மக்கள் சபையை விட்டும் விலகும் முன்னறிவிப்பு!

பசுவதைத் தடுப்பு மசோதா பிரச்னையில் நேருவுக்கும் தாண்டனுக்கும் தகராறு

மேலும் பலர் காங்கிரசிலிருந்து வெளியேறக்கூடும்!

பசு மாடுகளையும், அதன் கன்றுகளையும் கொன்று தின்பதற்குத் தடை விதிக்கக் கூடிய மசோதா ஒன்றை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோவிந்த தாஸ் என்பவர், மக்கள் சபையில் 1952 ஜூலை 15-ல் ஒரு மசோதா கொண்டு வந்தார். அம்மசோதாவின் மீது, மக்கள் சபையில் பலமுறை விவாதங்கள் நிகழ்ந்தும் உள்ளன.

மீண்டும் அம்மசோதாவை விவாதித்துச் சட்டமாக்க வேண்டுமென கோவிந்த தாஸ் வற்புறுத்தலானார். அம்மசோதா சட்டமாவதை நேரு விரும்பவில்லை. சட்டமாகக் கூடாது எனக் கருதப்படும் மேற்படி மசோதாவை வற்புறுத்தாமல் வாபஸ் பெற்றுக்கொள்ள மசோதா கொண்டு வந்தவரைக் கேட்டுக் கொள்வதுதான் முறையாகும். வேண்டுகோளுக்கு இணங்க அவர் மறுக்கும் பட்சத்தில், அவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால், மசோதாவைக் கண்டிப்பாக வாபஸ் பெறும்படி அவரைக் கட்டாயப்படுத்துவதுதான் எதிர்பார்க்கக் கூடியதுமாகும்.

ஆனல் பண்டிதரோ, மசோதா கொண்டுவந்த கோவிந்த தாசை, அவர் விருப்பப்படி மசோதாவை வலியுறுத்த அனுமதித்துவிட்டதுடன், மசோதாவைத் தங்கள் தங்கள் மனச்சாட்சிப்படி ஆதரிக்கவும் செய்யலாம்—எதிர்க்கவும் செய்யலாம் என, மற்ற காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் காங்கிரஸ் கட்சி கொறடாவைக் கொண்டு, அதே காலத்தில கட்டளையும் பிறப்பித்துவிட்டார்.

மேற்குறித்துள்ள கருத்துடைய மசோதாவை ஆராய்ந்து சட்டமாக்குவது மக்கள் சபை அதிகாரத்திற்கு உட்பட்டதா இல்லையா என்பதை, மசோதாவை அனுமதித்தபொழுதே கருதியிருக்க வேண்டியது முக்கியமாகும்; ஆனல், அப்பொழுது சிந்தித்துப் பாராமல் மசோதாவை அனுமதித்துவிட்டு, இப்பொழுது—அதாவது இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு, அதிலும் மசோதாவின்மீது பலமுறை விவாதம புரிந்துவிட்டு, 'மசோதாவில் அடங்கியுள்ள பிரச்சினை குறித்து ஆராய்வது மக்கள் சபையின் அதிகார வரம்புக்குப் புறம்பானது,' எனக் கூறுவது, பின் யோசனையின் விளைவு என்றே தீர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது.

மசோதாவின் உள்ளடக்கம் மக்கள் சபையின் பொறுப்புக்கு அப்பாற்பட்டது எனக் கூறும் பண்டிதர், அதே நேரத்தில், 'குறிப்பிட்ட விவகாரத்தில் அகில இந்திய ரீதியில் சட்டமியற்றுவது, மசோதாவின் நோக்கத்தை நிறைவேற்ற உதவாது,' என்றும், 'அதற்கு மாருக, வீண் தொல்லைகள் உருவாகக் கூடும்,' என்றும் குறிப்பிடுகிருர். அதற்கு எடுத்துக்காட்டாக, வடகிழக்கு எல்லைப்புற மலைப்பகுதியினர், 'சட்ட மூலம் பசு வதை தடை செய்யப்பட இருக்கிறது' எனக் கூறி, மலை ஜாதியினரின் ஆத்திரத்தையும், எதிர்ப்பையும் இந்தியப் பேரரசிற்கு எதிராகத் திரட்டியுள்ளனர் எனப் பண்டிதர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கங்குள்ள நிலைமைக்கேற்ப, 'கட்டாயத் தேவை இருக்கிறது,' என்று ஏற்படுமானல், மாநில அரசாங்கங்கள் பசுவதைத் தடுப்பிற்கான சட்டங்களை இயற்றிக் கொள்வதுதான் முறை எனவும் பண்டிதர், ஏற்படும் எதிர்ப்பிலிருந்து தம்மைத் தந்திரமாக விலக்கிக்கொண்டு, அவ்வெதிர்ப்புக்கு மாநிலங்களை மிக மிகத் தாராளமாகப் பலியிடத் துணிந்து அறிவுரை கூறுகிருர்.

பசுவதையைத் தடுக்க சட்டம் தேவையா இல்லையா என்ற மூலப் பிரச்சினை ஒதுக்கப்பட்டு விட்டு, கோவிந்த தாஸ் கொண்டு வந்துள்ள மசோதாவை விவாதிப்பதில் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு மக்கள் சபை காங்கிரஸ் கொறடா கடைசி நேரத்தில் இட்ட கட்டளை நியாயமானதா இல்லையா என்பது பெரிய பிரச்சினையாக்கப்பட்டுவிட்டது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

பாகிஸ்தான் நெருக்கடி

அமெரிக்கா கவலை

புதுடில்லி, ஏப். 12—

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பொருளாதார, இராணுவ உதவிகள் அளித்த போதும்கூட அங்கு 'ஜனநாயகம்' பெரிதும் திணறுகிறது என்பதை அமெரிக்கா படிப்படியாக உணர்ந்து வருகிறதாம்.

உலக சமாதானத்திற்கு 'தார்மீக சக்தி!'

உலக சமாதானம் ஏற்பட ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு 'தார்மீக சக்தி'யைத் திரட்டும் என தான் நம்புவதாக இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்னோ கூறியிருக்கிருர்.

கட்டாய இந்திக்குத் தூபம்

காமராசர் முன்னிலையில் தீர்மானம்

அருப்புக் கோட்டையில் ஏப்ரல் 9-ல் நடைபெற்ற அரசியல் மாநாட்டில், ஆபத்தான ஓர் தீர்மானம், முதலமைச்சர் காமராசர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பள்ளிகளில் உயர் வகுப்புகளில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க வேண்டும் என்றும், சர்க்கார் அதற்கான சட்டம் இயற்ற வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் தோழர் எஸ். வி. சோமசுந்தரம் என்பவரால் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் முதலமைச்சர் காமராசர் கலந்துகொண்டிருக்கிருர்.

இந்தி மொழி ஆதிக்கத்தைப் பலரும் எதிர்த்துவரும் இந்தக் காலத்தில், கட்டாய இந்தி வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, காங்கிரஸ் வட்டாரத்திலேயே அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகும்.

சட்டாய இந்திக்கு இந்தச் சமயம் தூபம் போடுவது, அரசியலில் பூத்திருக்கும் சமரசச் சூழ்நிலையைப் பாழாக்கக் கூடியது என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே கருதப்படுகிறது.

சீனப்பிரதமர் தப்பினர்!

விமானம் கடலில் விழுந்தது; 11 சீனர்கள் பலி?

சிங்கப்பூர், ஏப். 11—

பாண்டங்கில் நடைபெறப் போகும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டிற்கு செஞ்சீன அதிகாரிகள் 11 பேர்களை ஏற்றிச் சென்ற 'ஏர் இந்தியா' விமானம் ஒன்று, சாரவாக் தீவுக்கு வடக்கே கடலில் விழுந்து நொறுங்கியதால், அந்தப் பிரயாணிகள் இறந்திருப்பார்களோ வென அஞ்சப்படுகிறதாம்.

விமானம் ஹாங்காங்கிலிருந்து ஜகார்தாவுக்குப் போய்க்கொண்டிருந்ததாம். அது மூன்று முறைகள் அபாய அறிவிப்புகள் அனுப்பியதாகத் தெரிகிறது.

"சீனப் பிரதமர் சௌ—என்—லாய் அந்த விமானத்தில் சென்ருரா?" என்று கேட்கப்பட்ட போது, "இல்லை" என்று தகவல் தரப்பட்டதாம்.

ஐக்கிய கேரளம்

'ஐக்கிய கேரள மாநிலம் அமைக்கும் வேலையை இந்திய சர்க்கார் துரிதப்படுத்தவேண்டும்,' என்று நேற்று இங்கு முடிந்துள்ள அகில கேரள மலையாளிகள் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

அமைச்சர் சுப்பிரமணியம் காணுவது கனவல்லவே!

கல்வி வளர்ச்சிக்கு ரூ. 88 கோடி கிடைக்குமென நம்புகிருராம்!

தலைச்சேரி, ஏப். 1—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 880 கோடி ஒதுக்கப்பட இருப்பதாயும், இதில் சென்னைக்கு 88 கோடி ரூபாய் கிடைக்குமென நம்புவதாயும், இதனல் கல்விக்கு ஆண்டுதோறும், ரூ. 11 கோடி செலவிடப் படுவதுடன், மேலும் ரூ. 10 கோடி செலவிடப்படும் என்றும் நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், மலபார் சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டினை துவக்கிவைத்த போது குறிப்பிட்டிருக்கிருர்.

250 மேயர்கள் ராஜினமா

பிரான்சில் மதுவிலக்கிற்கு எதிர்ப்பு

உயர்ந்த மதுவகைகளின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதை எதிர்த்து சுமார் 250 நகர, கிராம மேயர்கள், தங்கள் பதவிகளை ராஜினமாச் செய்து விட்டனராம்!

சர்க்காரின் மதக் கொள்கையினை எதிர்க்குமுகத்தான்தாங்கள் அடுத்து வர இருக்கும் தேர்தலின் போது, வாக்களிக்கும் நிலையங்களான நகர மண்டபங்களை மூடிவிடுவதாகவும் அவர்கள் அச்சுறுத்தியிருக்கின்றனர்.

பிரான்சு முன்னள் பிரதம மந்திரி கூட குற்றச்சாட்டிற்கு ஆளானர்.

அவர், மதுவகை உற்பத்திக்குத் தரப்பட்டு வந்த மானியத் தொகையைக் குறைத்தார் என்றும், அதனல் உற்பத்தி பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும், சர்க்காரின் கொள்கையால், வெளி நாடுகள் பலவற்றிலிருந்து மதுவகைகள் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுவதாயும், இதனல் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப் படுகிறது.

★★

தலைமைக் கழக அறிக்கை-6/55

மாவட்டப் பிரதிநிதி

சிற்றூர்—பேரூர் (சிறிய-பெரிய பஞ்சாயத்து) கிளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாவட்டப் பிரதிநிதியைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். சில கிளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. அவர்களில் முதலில் காணப்படும் ஒருவருக்குத்தான் மாவட்டப் பிரதிநிதிச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அறிவகம்" சென்னை
31—3—55

சி. என். அண்ணதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க

★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—4—'55 செவ்வாய்

குறைந்திருக்கிறது!

ஏறத்தாழ ரூ. 50 இலட்சம் மதிப்புடைய கைத்தறித் துணி விற்பனையாகாமல் கூட்டுறவு கைத்தறி ஆடை விற்பனைசாலைகளில் தேங்கிக்கிடப்பதாக இவ்வாண்டு முதலில் கூறப்பட்டது. அப்படி தேங்கிக்கிடந்த துணிகளில், ரூ. 11 இலட்சம் மதிப்புடைய துணிகள் 75 நாட்களில் விற்பனையாகி இருப்பதாக சென்னை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அதுவுமன்றி, சென்ற ஆண்டில் நடைபெற்ற சென்னை கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 43,000 மதிப்புடைய கைத்தறி ஆடையே விற்றிருக்க, இவ்வாண்டு சென்னை கைத்தறிக் கண்காட்சியில் ரூ. 93,082 மதிப்புடைய ஆடை விற்றிருப்பதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தேங்கிக் கிடந்த கைத்தறியாடையின் மதிப்பு ரூ. 50 இலட்சத்திலிருந்து ரூ. 39 இலட்சமாகக் குறைந்திருப்பதும், சென்னை கண்காட்சியில் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் கொஞ்சம் குறைவாக விற்றிருப்பதும், ஐயத்திற்கிடமின்றி, அனைவருக்கும் மகிழ்ச்சியூட்டக்கூடியதேயாகும். ஏனெனில் கூட்டுறவு இயக்கத்தின் ஆற்றல் குறித்து, கைத்தறியாளர்களிடை ஏற்பட்டிருந்த அல்லது ஏற்பட இருந்த ஐயமும், மேற்படி கனிசமான விற்பனையால் குறைந்திருக்கக் கூடும் எனவும் திட்டமாகக் கொள்ளலாம்.

தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணி கனிசமாக மூன்று மாதங்களில் விற்பனையாகி இருப்பதால் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சி நீடித்த ஒன்றாக இருக்கவேண்டும். அத்தகு நீடித்த மகிழ்ச்சி ஏற்படுவதும் ஏற்படாததும், கைவசத்தில் தேங்கிக் கிடக்கும் கைத்தறியாடை குறுகிய காலத்திற்குள் விற்பனையாவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

தேங்கிக் கிடக்கும் துணி கனிசமாக விற்றிருக்கிறது என்பதில் ஏற்படுகிற மகிழ்ச்சி முழுநிலை பெற்றிருப்பதல்ல. அம்மகிழ்ச்சியில் சஞ்சலமும் இரண்டறக் கலந்தே இருக்கிறது.

விற்பனையும் உற்பத்தியும் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு இருப்பவையாகும். விற்பனையின் வேகத்தையும், மந்தத்தையும் பொறுத்துத்தான் இடையுறாத உற்பத்திப் பெருக்கமும் உற்பத்தி இன்மையும் நிகழக்கூடும்.

கூட்டுறவு கைத்தறி விற்பனை நிலையங்களில் இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புடைய கைத்தறியாடை தேங்கிவிட்டது; மேற்கொண்டு கூட்டுறவு கைத்தறியாடை உற்பத்தி கணிசமான அளவு குறைக்கப்பட்டுவிட்டது—அல்லது அறவே நிறுத்தப்பட்டுவிட்டது. அதன் பலனாக கூட்டுறவு இயக்கம் ஸ்தம்பிக்கவும், நெசவாளர்கள் வேலையற்றுப் போகவுமான நிலை ஏற்பட்டது.

தேங்கிக் கிடக்கும் துணி கணிசமாக விற்றிருக்கிறது என்ற அரசாங்கச் செய்தி, கைத்தறியின் எதிர்காலத்தில் மீண்டும் நம்பிக்கையையூட்டுவதாக இருந்தபோதிலும், முன்போல் மீண்டும் உற்பத்திக்கு வழி செய்திருக்கிறது என்பதை ஐயத்திற்கிடமின்றி அறிவிப்பதாக அமையவில்லை. தேங்கிக் கிடந்தத் துணி கனிசமாக விற்றிருக்கிறது என்பதை மட்டுமே எடுத்துக்காட்டியிருப்பதானது, பொதுவாகப் பொது மக்களையும் குறிப்பாகக் கைத்தறியாளர்களையும் திருப்திப்படுத்த மட்டும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட ஒரு ஏற்பாடெனவே எண்ண வேண்டியதாக இருக்கிறது.

தேங்கிக்கிடக்கும் துணியும் வேகமாக விற்றாக வேண்டும். அதில் கொஞ்சமும் குறையாத அளவில் உற்பத்தியும் இடைவிடாது நடக்கவேண்டியதாகவே இருக்க வேண்டும். அதற்குத்தான் இந்த அரசாங்கம் நிலையான வழி காட்டவேண்டும்.

இதைவிடுத்து, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணி கனிசமாக விற்றிருக்கிறது எனக் குறித்துக்காட்டுவதின் மூலம், கைத்தறி வளர்ச்சியில் தனக்குள்ள கவலையையும் கருத்தையும் மெய்ப்பித்துக்கொள்ளமுடியும் என அரசாங்கம் கருதுமானுல், அது தன்னையும் ஏமாற்றிக்கொண்டு அதே காலத்தில் பொதுமக்களையும் ஏமாற்றுவதாகவே முடிந்துவிடும். அதுவுமன்றி, நெசவாளர்களின் கண்ணீரும் அதனால் தடைக்கப்பட்டுவிடாது எனவும் அரசாங்கத்தை எச்சரிக்கிறோம்.

தேய்பிறையும், வளர்பிறையும் அடுத்தடுத்து ஏற்படவிடாமல், கைத்தறியை நிலையான வாழ்வு பெறும் ஏற்பாட்டில் நிலைப்படுத்த வேண்டும். அதற்கு சென்னை சட்டசபையின் முடிவை, அதாவது வண்ணச் சேலையையும், கரை போட்ட வேட்டியையும் கைத்தறிக்கே ஒதுக்கிவிடுவது என்ற ஏற்பாட்டை, உடனடியாகச் செயலாற்ற இந்தியப் பேரரசை சென்னை அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டும்.

அப்பொழுதுதான் தேங்கிக் கிடக்கும் துணி கனிசமாக விற்பனையாகி இருக்கிறது என்ற செய்தியைத் தந்து, நெசவாளர்கள் முகத்தில் புன்முறுவல் தோன்றுகிறதா எனப் பார்க்க முடியும். அரசாங்கம், ஏமாற்றத்தையே பிரதிபலனாகப் பெறுவதற்குப் பதிலாக, நிச்சயமாக நெசவாளர்களின் வேதனை 'குறைந்திருக்கிறது' எனக் கண்டு உண்மையான பூரிப்பு கொள்ள இடமேற்படும். இந்தியப் பேரரசைத் தட்டிக் கேட்பதில் தனக்கு நெஞ்சுரம் 'குறைந்திருக்கிறது' என்பதைச் சென்னை அரசாங்கம், தனது செயல் மூலம் காட்டிக்கொண்டு வருகிறவரையில், கைத்தறி தேங்கிக் கிடக்கிறது — விற்பனை 'குறைந்திருக்கிறது' — நெசவாளர்களின் உள்ளங்களிலும், இல்லங்களி

சமாதானம் நிலவ ஒரு உடன்படிக்கை!

புதுடில்லி, ஏப். 10—

ஜினீவா ஒப்பந்தத்தை சரிவர அமுல் நடத்தவேண்டுமென உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் நேருவும் வியட்மின் அயல் நாட்டமைச்சர் பாம்-வான்-டாங்கும் அறிவித்திருக்கின்றனர்.

அவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் காணப்படுவதாவது:-

'ஜினீவா உடன்படிக்கைப்படி வியட்நாமை ஒற்றுமைப்படுத்த வேண்டியது மிக மிக அவசிய மாகும்; ஜினீவா உடன்படிக்கையை வெற்றிகரமாக அமுல் நடத்தினால், வியட்நாமில் மட்டுமல்லாமல் இந்தோ—சீனா முழுவதிலும், தென்கிழக்கு ஆசியப் பகுதி நாடுகளிலும் சமாதானம் நிலைத்திருக்கப் பெரிதும் உதவியாக இருக்கும்."

அவ்வளவுதானே?

இந்தியாவில் அமெரிக்க சினிமாப் படங்களை வினியோகிப்பதின் மூலம் அமெரிக்க பிலிம் கம்பெனிகள் சென்ற ஆண்டில் ரூ. 72,09,000 சம்பாதித்தனவாம்! இத்தொகையில் ரூ 43,10,000 அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டதென்றும், டெல்லி மக்கள் சபையில் அமைச்சர் எம். சி. ஷா தெரிவித்திருக்கிறார்.

ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு: முன்முர ஏற்பாடு

வருகிற 18-ந் தேதி பன்டுங் நகரில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான ஓவியர்களும், தச்சர்களும், தொழிலாளர்களும், குமாஸ்தாக்களும் 18 மணி நேர வேலையை மேற்கொண்டுள்ளனராம்.

மொழிவழி மாநில கோரிக்கையினர் பிளவு சக்திகளாம்!

பஞ்சாபியர்மீது அபாண்ட பொய்

பலாத்காரத்தைக் காட்டி கோரிக்கையைக் கறைபடுத்த பண்டித பந்தின் முயற்சியும்—மிரட்டலும்

அம்பாலா, ஏப். 9—

"மொழி அடிப்படையில் பஞ்சாப் மாநிலத்தை அமைக்க எழுப்பப்படும் பயமுறுத்தல்களுக்கெல்லாம் இந்திய சர்க்கார் பணிந்துவிடாது.

"தகராறுகளுக்கு இடந்தரும் எந்த ஒரு பிரச்சினையையும் சர்க்கார் சமாதான சூழ்நிலையிலிருந்து விவாதிக்கத் தயார்தான். ஆனால், பலாத்காரங்களுக்கு மட்டும் சர்க்கார் பணிந்துவிடப் போவதில்லை.

"எல்லா மக்களின் நன்மைகளையும் நாம் கவனிக்கவேண்டும். கோரிக்கை எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அதனை பலாத்காரச் செயலாலோ, அல்லது பயமுறுத்தல்களாலோ நிச்சயம் நிறைவேற்றிவிட முடியாது."

—இவ்வாறு, அம்பாலாவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் கூறினர்.

மேலும் அவர் பேசியிருப்பதாவது:—

"பஞ்சாப் மாநிலக் கோரிக்கையின் பேரில், அங்குள்ள பிளவுச் சக்திகள் மிக நெருக்கடியான நிலைமைகளை உருவாக்கியிருப்பது மிக வருந்தத்தக்கது. பஞ்சாப் மக்கள் சமாதானத்தை எவ்வகையிலேனும் நிலவச் செய்ய வேண்டும். மதம், அல்லது மொழிகளின்கீழ் பிரிக்கச் செய்யப்படும் முயற்சிக்கு பஞ்சாப் மக்கள் இடந்தரக் கூடாது.

"எந்த ஒரு பிற நாட்டிடமும்—குறிப்பாக பாகிஸ்தானிடம் நமக்கு எவ்வித விரோத மனப்பான்மையும் கிடையாது. ஆனால், நம்முடைய நல்லெண்ணத்தை எந்த பிற நாடும் சுரண்ட முடியாது."

இவ்வாறு குறிப்பிட்ட பண்டித பந்த் மேலும், 'பலாத்காரத்திற்குப் பணிகிறவர்களால் நாடு முன்னேறப் பாதை வழியே அழைத்துச் செல்லப்படமுடியாது. நாம் 'புதியதோர் இந்தியாவை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுவருகிறோம்; மதம், அல்லது வகுப்பு வேறுபாட்டுக்கு இடந்தராதவர்கள்தான் நாட்டை நிர்மாணிப்பதில் உதவியளிக்கக் கூடும்,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தாலியைப் பறிகொடுத்த அம்மன்!

களவாடிய அய்யங்கார் கைது!

குடந்தை, ஏப். 8—

ஒம்பலச்சேரி கோவிலில் உள்ள அம்மன் கழுத்திலிருந்த தாலி களவாடப்பட்டுவிட்டது. அறுதலியாக அம்மன் இருந்து வருகிறது!

மேற்படி கோவில் பட்டரான சீனிவாச அய்யங்கார் என்பவர் தான் அம்மன தாலியைக் களவாடி இருக்க வேண்டும் என்பது போலீசாரின் யூகம். காரணம், தாலி களவு போனதிலிருந்து அய்யங்கார் தலைமறைந்துவிட்டதேயாகும்!

இறுதியாக போலீஸ், அய்யங்காரைக் கைது செய்து, ஜாமீனில் விடுவித்துள்ளனர்.

'மன்மத,' 'துன்முகி' ஆண்டுகளில் திருமணங்கள் நடைபெறுமா?

"சில ஜோதிடர்கள் மன்மத ஆண்டில் திருமணம் செய்து கொள்ளக் கூடாதென்கிறார்கள்; மற்றும் சில ஜோதிடர்களோ துன்முகி ஆண்டில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்கிறார்கள்; இதனால் பொது மக்களுக்கு ஜோதிடத்தின் மேல் சந்தேகப் பார்வையும், அவநம்பிக்கையும் ஏற்படுகிறது ஒருவன் பிறக்கின்ற காலத்தில் இருக்கும் கிரக அமைப்புகளைக் கொண்டு ஜோதிட சாத்திரக் கணிதப்படி, பிரம்மச்சாரி ஜாதகமென்றே, அல்லது குடும்ப வாழ்வில் ஈடுபடுபவன் என்றோ, ஒரு மனைவிக்காரன்—அல்லது பல மனைவியருக்குக் கணவனுவான் என்றோ நிர்ணயிப்பதுடன், அவனது திருமண ஆண்டு, மாதம், நாள் முதலியவற்றையும் நிர்ணயிப்பதுண்டு. அப்படி இருக்க, முதலில் ஒருவன் பிறக்கின்ற காலவிதிப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ராசி, திருமணகாலக் குருவாக இருக்கும். ஆகையால், ஜாதக விதிப்படிதான் திருமணமே தவிர, நம்முடைய விருப்பப்படி திருமணத்தை நாம் நடத்தவோ நிராகரிக்கவோ முடியாது.

"திருமணத்தை நாம் நல்லதாக நிர்ணயம் செய்து நடத்துகிறதென்பது அர்த்தமற்ற பேச்சு; லக்னதிபதியும், ஏழாவது அதிபதியும் 6—8—12 ஆகிய பாவத்திலிருந்தால், பெரிய பணக்காரனுனாலும் அவன் திருமணம் செய்துகொள்ள முடியாது. ஏழாவது அதிபதி பலமாக, தனலாப கேந்திரகோணத்திலிருந்தால் சிரமமில்லாமல் களத்திர திருமணம் இலேசாக நடைபெறும். ஏழையானாலும் திருமணத்தை, நாம் முடிக்கிறது—லும்—வளம் 'குறைந்திருக்கிறது' என்ற நிலை நீடிக்கத்தான் செய்யும்.

நாம் நிறுத்திக்கொள்வது என்று சோதிடர் கூறுவது மனம் வருந்தத் தக்கதுதான். ஆகையால் 'மன்மத' ஆண்டிலும், 'துன்முகி' ஆண்டிலும் தடையேதுமின்றி திருமணம் செய்துகொள்ளலாம் என்பது என் கருத்து."

—சென்னை 10—4—55 'சுதேசமித்திரன்' இதழில் ஈரோடு டி. எஸ். மாணிக்கய்ய சாஸ்திரி.

குளிக்கும் வசதியா?

இரயில்களில் நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் 3-வது வகுப்புப் பிரயாணிகளுக்கும் குளிப்பதற்கான வசதிகளைச் செய்து தருவது பற்றி மத்திய சர்க்கார் இரயில்வே இலாகா ஆலோசனை செய்து வருவதாக அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்திருக்கிறார்.

ரூ. 43 - கோடி குறைந்து விடும்!

நாடு முழுமையிலும் மதுவிலக்குத் திட்டம் அமுல் செய்யப்பட்டால் ஆண்டொன்றுக்கு ரூ. 43 - கோடி வருமானம் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சோவியத்—வட கொரியத் தலைநகர்

இரயில் மூலம் இணைப்பு

சோவியத் ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவிற்கும், வட கொரியத் தலைநகரான பியோங் யாங்கிற்கும் இடையே 4000 மைல் தூரத்திற்கு நேர் இரயில் போக்குவரத்து விரைவிலேயே ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கை சர்க்கார் விபரீதப் போக்கு

இந்தியரைத் துரத்த மற்றோர் சூழ்ச்சி

"இலங்கையில் கள்ளத்தனமாகக் குடியேறியவர்களைக் கண்டுபிடிக்க இலங்கை குடிகளெல்லாதவர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்பது அவ்வளவு முக்கியமானதல்ல; இலங்கைக் குடியுரிமை கோரி மனுத் தாக்கல் செய்துகொள்பவர்களையும், இந்தியத் தூதுவரிடமிருந்து பிரயாணச் சீட்டு வைத்திருப்பவர்களையும் தவிர, பாக்கி இந்தியர்கள் அனைவரும் கள்ளத்தனமாகக் குடியேறியவர்கள் என்று கண்டுபிடித்துவிடலாம்."

இவ்வாறு, இலங்கை சர்க்கார் அபிப்பிராயப்படுவதாக, கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில இதழ் ஒன்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்தக் கருத்தை இலங்கை சர்க்கார் அதிகார வட்டாரங்கள் மறுக்கவோ, அன்றி உறுதிப்படுத்தவோ முன்வரவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கை சர்க்கார், குடியேற்றச் சட்டத்தைத் திருத்த முற்பட்டுவிட்டதால் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் அவதிக்குள்ளாவார்கள் என்று அஞ்சப்படுகிறது.

அவசரப்படாமலிருந்தால் அனுதாபமுடன் கவனிக்கப்படுமாம்

சமூக அமைப்பு மாறினாலன்றி உருவான பலனைக் காண இயலாதாம்

என்.ஜி.ஓ.-க்கள் கோரிக்கைக்கு முதலமைச்சர் காமராசர் ஆறுதல் கூறுகிறார்

"என்.ஜி.ஓ.-க்கள் அவசரப்படாமல் இருந்தால் அவர்களுடைய கோரிக்கைகளை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிக்கும்.

"கடுமையாக உழைக்கிறவர்களுக்குக் குறைந்த ஊதியமே கிடைத்துவருகிறதென்ற நிலை உண்மையிலேயே வருந்தத் தக்கது; சமூக அமைப்பு மாற்றப்பட்டாலல்லாமல் இனிமேல் உருப்படியான எந்தப் பலனையும் காணவோ, அனுபவிக்கவோ முடியாது.

"எல்லோரும் அவரவர் பிரச்சினைகளையே முக்கியமான பிரச்சினை என்று கருதி அவற்றை தீர்க்க வேண்டுமென்று கூறக் கூடாது. அப்படிச் செய்தாலும் அது நிரந்தரமான ஒன்றாக அமைய முடியாது; என்.ஜி.ஓ.-க்களின் பிரச்சினையோ இலகுவில் தீர்த்துவிடக்கூடிய ஒன்றல்ல; எனவே, இது விஷயத்தில் பொறுமையாக இருந்துதான் ஆக வேண்டும்"

இவ்வாறு, முதலமைச்சர் காமராசர், கோவில்பட்டி தாலுகா என்.ஜி.ஓ.-க்கள் சங்கத்தவரால் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றிற்குப் பதிலிறுத்துப் பேச்சையில் கூறினார்.

அமைச்சர் மீது குற்றச்சாட்டு

பட்டியல் தயாரிக்க விசேட அதிகாரிக்குக் கோரிக்கை

பஞ்சாப் முதலமைச்சர் சச்சார், தமது மந்திரி சபையிலுள்ள போக்கு - வரத்து, கல்வி அமைச்சரான ஜெகத் நாராயணன் மீதுள்ள குற்றச்சாட்டுகள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும்படி, சர்க்கார் காரியாலய விசேட அதிகாரியான ஆர் பி. கபூர் என்பவரை கேட்டுக் கொண்டுள்ளாராம்.

ஜெகத்நாராயணன் மீது லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டதும், அதனை யொட்டி அவர் கல்வி இலாகா பொறுப்பைக் கைவிட்டதும் ஏற்கனவே அறிந்ததே.

இப்போது, ஜெகத் நாராயணன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஒரே நேரத்தில் முடிவு காண வேண்டுமென முதலமைச்சர் விரும்புகிறாராம்.

இது விஷயமாகக் கபூர் தம் முழு முயற்சியையும் உபயோகித்து தக்க ஆதாரங்களைத் தேடி அலைகிறாராம்!

கை தூக்கி ஓட்டளிக்கும் முறை

மாற்றி அமைக்கத் திட்டம்

சர்க்கார் உத்திரவு

"கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் வாக்காளர்கள் கைதூக்கி வாக்குச் செய்வதால், தேர்தல்கள் ஒழுங்காக நடைபெறவில்லை; இதனால், பஞ்சாயத்துக்களில் பெரும் பிளவுகள் ஏற்பட்டு, நிர்வாக ஊழல்கள் அதிகரிக்கின்றன; எனவே, கை தூக்கி வாக்குச் செய்து தேர்தல் நடத்தும் முறையை மாற்றி அமைக்க சர்க்கார் ஆலோசனை செய்து, புதிய ஒரு திட்டத்தைக் கையாள உத்தேசித்துள்ளது,"

என்று, சென்னை ஸ்தல ஸ்தாபன அமைச்சர் இராமசாமி படையாச்சி தர்மபுரி தாலுகா பஞ்சாயத்துக்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

பழிக்குப் பழியா?

இரங்கூனுக்கு 70 கல் தொலைவில் வடமேற்கிலுள்ள 3 சிற்றூர்களை ஆயுதந்தாங்கிய நூற்றுக் கணக்கான கரேன் கலகக்காரர்கள் தாக்கி தீயிட்டனரென்றும், 100 பேரை கைது செய்துள்ளனரென்றும் கூறப்படுகிறது.

அங்குள்ள அரிசி அரைக்கும் இயந்திரங்கள், இரயில் என்ஜின்கள், வாகனங்கள் யாவும் 'டைனமைட்' வெடிகளால் தகர்க்கப்பட்டனவாம்.

மோல்மீன் எனும் இடத்திற்கு வடக்கே ஒரு இடத்தை அரசாங்கத் துருப்புகள் தாக்கிப் பிடித்துக் கொண்டதற்குப் பழிவாங்குவதற்காகவே இத்தாக்குதலை அவர்கள் நடத்தினதாகக் காரணம் கூறப்படுகிறதாம்.

புதுவையில் பொதுத் தேர்தல்

புதுவை மாநிலத்தின் பொதுத் தேர்தல் வருகிற ஜூன் மாதம் இறுதி நாட்களில் நடைபெறும் என்று புதுவை பிரதம கமிஷனர் கேவல்சிங் அறிவித்துள்ளார்.

முக்கூட்டு குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்ய இயலாதாம்!

'ஏராளமான பேர் வேலை இழந்துவிடுவர்,' என காமராசர் யூகம்!

"தொழில் தகராறுகளை வெளியிடத்தார் தலையீடு எதுவுமில்லாமல் தொழிலாளரும், நிர்வாகத்தினரும் தங்களிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தித் தீர்த்துக் கொள்ளும் முறைதான் சாலச் சிறந்த ஒன்றாகும்; இம்முறையினால் இரு சாராரிடையேயும் நிரந்தரமான நல்லுறவு நிலவுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் உண்டாகும்"

என்று முதலமைச்சர் காமராசர், கோவில்பட்டி லட்சுமி மில் தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் யூனியனின் 3-வது ஆண்டு விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

துணிகள் சம்பந்தப்பட்ட எல்லா வகைத் தொழில்களையும், அல்லது எல்லா மில்களையும் ஒன்றாகக் கருதி முக்கூட்டுக் குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்வது கஷ்டமாகும் என்று அவர் குறிப்பிட்டார். முக்கூட்டுக் குழுவின் இச்சிபாரிசுகளை ஒரு சில ஆலைகள் அமுல் செய்ய முடியும்; ஆனால் மற்றும் சில ஆலைகள், இதனை அமுல் செய்வதாயின் கட்டுப்படியாகாமல் மூடவேண்டிய நிலைமை ஏற்படும்; இதுதான் இந்தக் கஷ்டத்திற்கான காரணமாகும் என்றும், இதன் விளைவாக ஏராளமான பேர் வேலை இழக்க நேரிடுவதுடன் உற்பத்தி பாதிக்கப்பட்டு, நாடும் நஷ்டமடையும் என்றும் அவர் கூறினார்.

'தீமை பயக்காத முறையில் முக்கூட்டுக் குழுவின் சிபாரிசுகளை எப்படி அமுல் செய்யலாம் என்பதுதான் இன்றைய சர்க்காரை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினை," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தங்கம் தரும் தொல்லை!

தற்போது எடுக்கப்பட்ட கணக்கு விவரப்படி, இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 2,000 தோலா தங்கம் தோண்டி எடுக்கப்படுகிறது; ஆனால் நாள் ஒன்றுக்கு வியாபாரிகளின் கைப்புழக்கத்தில் இருந்துவரும் தங்கத்தின் அளவோ 6,000 தோலா ஆகும்; எனவே, இந்த அதிகப்படியான 4,000 - தோலா தங்கமும், கள்ளத்தனமாக வெளியிடங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன என்றுதான் கொள்ள வேண்டியதாகிறது.

செய்திச் சுருள்

★

பன்னீர்செல்வம் நினைவுப் படிப்பகம்

3—4—55ல், மதுரை பொன்னகரம், மீனாட்சிதோப்பு பன்னீர் செல்வம் நினைவுப் படிப்பக செயற்குழு கூட்டம் தோழர் இராயப்பன் தலைமையில் நடைபெற்ற போது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: எ. தங்கையா; துணைச் செயலாளர்: வடிவேலு; பொருளாளர்: மணி; விளம்பர உறுப்பினர்: அருணாசலம்; மற்றும் 7 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

பம்பாய் தி. மு. கழக சொற்பயிற்சி வகுப்பு

3—4—55 மாலை 6-30 மணிக்கு 'திராவிடரக'த்தில் தோழர் சி. த. மு இர. ஆரியசங்காரன், சொற்பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து 'சொல்லாற்றல்' குறித்து சொற்பொழிவாற்றினார். தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் தோழர்கள் வடவைக்குயில், த மு. பொற்கோ ஆகியவர்கள் சிறப்புரையாற்றினர்.

அழகிரி படத் திறப்புவிழா

செங்குன்றம் அழிஞ்சிவாக்கம் கிராமத்தில், 3—4—55 மாலை 7 மணிக்கு, அழகிரி மன்றச் சார்பில் மேற்படிவிழா நடைபெற்றது. தோழர் டி. சண்முகம், எம் எல். ஏ, அவர்கள் தலைமை தாங்கி, அழகிரி படத்தை திறந்து வைத்தார்: பின்னர் தோழர் வெற்றிவீரன் சிறிதுநேரம் பேசிய பின் தோழர் க. அன்பழகன் அவர்கள், அழகிரியின் தொண்டினையும், தி. மு. கழகத்தின் பணியினையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில், தோழர் துரைவேலன் அவர்களின் குழந்தைக்கு, தோழர் அன்பழகன் 'நெடுஞ்செழியன்' என்ற பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

அண்ணா படிப்பகம் திறப்பு

வாணியம்பாடி (வ ஆ) ஏப். 6—

வாணியம்பாடி கோணாமேட்டின் நகரில், தோழர் முல்லை - சத்தியம் தலைமையில், மேற்படி படிப்பகம் திறக்கப்பட்டது. தோழர்கள் போளூர்-சுப்பிரமணியம், நெடுஞ்சோழன், வி. என். தத்தப்பன், டி. எ. ஆறுமுகம், எ. எல். முனிரத்தினம் ஆகியோர் பேசினர்.

தோழர் முல்லை-சத்தியம் படிப்பகத்தின் அவசியம் குறித்து விளக்கமாகப் பேசினார்.

சென்னைக்கு ரூ. 50,000 கடன்!

கைவேலைகளின் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் மேலும் பல மாநிலங்களுக்கு மானியங்களும், கடன்களும் வழங்கியுள்ளனர்.

மதுரையில் ஒரு 'எம்போரியம்' அமைக்க சென்னை மாநிலத்திற்கு ரூ. 50,000 கடனும், ரூ. 10,000 - மானியமும் தந்துள்ளனர்.

அவ்வதிகாரமும் அவர்களுக்கே!

இந்தியா—இலங்கை பிரயாண அனுமதிச் சீட்டுகள் வழங்குவதை இதுவரையிலும் மாநில சர்க்கார்களே ஏற்று நடத்தி வந்தன; ஆனால் இப்போது அந்த அதிகாரப் பொறுப்பை இந்திய சர்க்கார் தனது கைக்கு மாற்றிக் கொண்டது.

இந்தியா — பாகிஸ்தான் பாஸ்போர்ட்டுகளை மாநில சர்க்கார்களே தொடர்ந்து வழங்கி வருமாம்.

வாணியம்பாடி தோல் பதனிடும் தொழிலாளர்கள் பொதுக் கூட்டம்

வாணியம்பாடி (வ ஆ), ஏப். 6—

வாணியம்பாடி கச்சேரி ரோடில், மேற்படி சங்க சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் பி. பெருமாள் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் எம். கிருட்டினசாமி, ஜி. எல். ஆனந்தன், வி. என். தத்தப்பன் ஆகியோர், தோல் பதனிடும் தொழிலாளரின் அவல நிலை குறித்துப் பேசினர்.

பெயர் சூட்டல்

திருமழிசை தி. மு. கழகத் தோழர் போரூரான் அவர்களின் துணைவியார் தோழியர் நவநீதம் அம்மையார், 15—3—55ல் பெற்றெடுத்த ஆண் குழந்தைக்கு 30—3—55ல், தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., முன்னிலையில் நடைபெற்ற பெயர் சூட்டல் விழாவில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் 'மதிவாணன்' எனப் பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

1956 இறுதியில் பொதுத் தேர்தல்?

இந்தியா முழுமையிலும் அடுத்த பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு இறுதியிலோ அல்லது 1957-ம் ஆண்டுத் துவக்கத்திலோ நடைபெறும் என்றும், அது விவரங்கள், ஏற்பாடுகள் குறித்து, அடுத்த மாதம் ஆரம்பத்தில், ஸ்ரீநகரில் நடைபெற இருக்கும் மாநாட்டின் போது ஆலோசிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

தேசத் துரோகம் செய்த அமெரிக்கர் மீது வழக்கு?

கொரியப் போரின்போது தேசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டதாக 176 அமெரிக்க இராணுவத்தினர் மீது வழக்குத் தொடருவது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்து வருவதாகவும், மேலும் இதே குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டு பலர் மீது வழக்குத் தொடரப்படலாமென்றும் கூறப்படுகிறது.

***

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

‘கொடுத்து வைத்த கோமான்கள்!’

கோடை காலத்தைக் கழிப்பதற்கு கொடைக்கானலுக்கு வருகின்றனர்

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், இந்த முறை, கோடை காலத்தைக் கழிக்க கொடைக்கானலுக்கு வருவார் என நம்பகமாகத் தெரிகிறது.

அதே நேரத்தில், சென்னை கவர்னர் பிரகாசாவும் அங்கு தங்குவார் என்றும் கூறப்படுகிறது. இராசேந்திரரை வரவேற்க மும்முரமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்.

கீழ் நீதிமன்றத் தீர்ப்பு ரத்தாகிறது!

கருப்பையா கொலை வழக்கில் எதிரி விடுதலை

“இறந்துபோன கருப்பையாவிற்குப் படுகாயம் விளைவித்தது மனுதாரர்தானு, அல்லது அவர்தான் காயம் விளைவித்திருக்க வேண்டுமென்ற சந்தேகத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறாரா என்பதே இவ்வழக்கில் ஆராய வேண்டிய ஒரு பெரிய பிரச்சினை ஆகும். கீழ் நீதி மன்றத்தில் நடைபெற்ற விசாரணை சம்மந்தமான சாட்சியங்களைப் பார்க்குமிடத்து பல முரண்பாடுகள் காணக்கிடைக்கின்றன.

“யார் குற்றவாளி என்பதை நிர்ணயிப்பதில் சந்தேகங்கள் பல எழுகின்றன; எதிரியின் மீது சந்தேகத்திற்கு இடமில்லாதவகையில் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கருதுவதற்கில்லை.”

—இவ்வாறு, மதுரையில் சென்ற 1953–ம் ஆண்டில் நேருவின் மதுரை வருகையையொட்டி நடைபெற்ற கருப்பையா கொலை வழக்கில் தீர்ப்பளித்துக் கூறிய சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி என் சோமசுந்தரம் கூறிவிட்டு, எதிரிக்குக் கீழ் நீதிமன்றம் அளித்த தண்டனையை ரத்து செய்துவிட்டு, அப்பீல் மனுவை ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தார்.

சென்ற 1953-ல் நேரு மதுரைக்கு வருகை தந்திருக்கையில் நடைபெற்ற கருப்பையா கொலை நிகழ்ச்சி சம்மந்தமாகப் பாண்டியன் என்பவர், இ. பி. கோ. 326-வது பிரிவின்கீழ் குற்றம் விளைவித்ததாகக் கைது செய்யப்பட்டு, மதுரை செஷன்ஸ் நீதிபதியால் ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்.

தண்டனையை எதிர்த்து பாண்டியன் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டார். அந்த அப்பீல் மனுவின் பேரில் நடைபெற்ற விசாரணையின்போதுதான் நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்திருக்கிறார்.

144 தடையை மீறிய லோகியா கைது

மணிப்பூரில் பொறுப்பாட்சி கோரி கிளர்ச்சி

இம்பால், எப். 11—

ம. சோ. கட்சித் தலைவரான டாக்டர் ராம் மனோகர் லோகியாவும், மற்றும் 5 பேர்களும், இப்பகுதியில் விதிக்கப்பட்டுள்ள 144 தடையுத்தரவை மீறி கூட்டமொன்றில் பேச முயன்றதாக, காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் அருகே கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிய வருகிறது.

மணிப்பூரின் கலைக்கப்பட்ட சட்ட சபையை மீண்டும் கூட்டவும், இப்போதுள்ள ஆலோசனை சபையைக் கலைக்கவும் கோரி மணிப்பூர் மாநில ம. சோ. கட்சியினர் நடத்திவரும் இயக்கத்தினுல் ஏற்பட்டுள்ள நிலையை அறிந்து கொள்ள டாக்டர் லோகியா இங்கு வந்தாராம்.

கைது செய்யப்பட்டோர் காவலில் உள்ளனர் என்று தெரிகிறது.

சென்னை மின்சார நிலையம்

விரிவுபடுத்தும் திட்டம் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படுமாம்

“சென்னை நகர மின்சார நிலைய விரிவுபடுத்தும் திட்டத்தை உள்ளடக்கிய இரு திட்டங்கள் இந்திய—அமெரிக்க தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்,” என்று மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், பாசன, மின்சார இலாகா உதவி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

ரேடியக் கிளர்ச்சி மேகங்கள்

இந்தியாவை எட்டியதா?

மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, எப். 11—

அணுசக்தி பயிற்சி பற்றி மக்கள் சபையில் கேள்விகள் கேட்கும்போது, “அமெரிக்கா நடத்திய அணுகுண்டு பரிசோதனைகளின் விளைவாக ரேடியக் கிளர்ச்சி மேகங்கள் இந்தியாவை எட்டினவா?” என்று கேட்கப்பட்டபோது, பண்டித நேரு, “இது பற்றி சர்க்காருக்கு எவ்வித தகவலும் இல்லை,” என்று தெரிவித்திருக்கிறார்.

★

ரேடியக் கிளர்ச்சி மழை பெய்ததா?

கல்கத்தா, எப். 11—

கடந்த மார்ச் 26, 27, ஏப்ரல் 3 ஆகிய தேதிகளில், கல்கத்தா நகரில் ரேடியக் கிளர்ச்சி மழை பெய்ததாக, சித்தரஞ்சன் புற்று நோய் மருத்துவ நிலைய அதிகாரி டாக்டர் சுபோதா மித்ரா கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனல், இந்த மழையினுல் பிராணிகளுக்கோ, தாவரங்களுக்கோ சிறிதும் தீமை ஏற்படாதவாறு ரேடியக் கிளர்ச்சித் தூளிகள் மிகமிகக் குறைவான ஆற்றலுடன் இருந்ததாகவும் கூறப்பட்டது. இது பற்றி பரிசோதனைகள் நடைபெற்றதாகவும் அவர் கூறினர்.

பால் விநியோகம்

சென்னை, எப். 12—

தமிழ் ஆண்டுப் பிறப்பன்று பால் விநியோக நாளையொட்டி நகரில் பல பாகங்களில் சுமார் 16 ஆயிரம் குழந்தைகளுக்குப் பால் வழங்கப்படுமாம்.

இதற்குச் செலவாகும் சுமார் 2,000 படி பாலை, அயன்புரம் கூட்டுறவு பால் சப்ளை யூனியன் இலவசமாகத் தர முன்வந்துள்ளதாம்.

அணுசக்தி பயிற்சிபெற!

அணுசக்தி பயிற்சிக்காக தகுந்த நபர்களை அனுப்புமாறு அமெரிக்க சர்க்கார் அனுப்பியிருந்த அழைப்பை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டதாக பண்டித நேரு, கேள்விக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

*****:*****:*****:***

வானெலியில் ‘இன்பக் கனவு’

“14—4—55 வியாழன் மாலை 3 மணி முதல் 4-30 மணி வரையிலும், சென்னை 2—வானெலி நிலையத்தில், நடிகர் தோழர் எம்.ஜி.இராமச்சந்திரன் நாடக மன்றத்தினரின் ‘இன்பக் கனவு’ நாடகம் ஒலிபரப்பப்படும்,”

என்று, எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினர் அறிவிக்கின்றனர்.

***** ****:*******

கழகக் கூட்டங்கள்

குளச்சல் (நாஞ்சில் மாவட்டம்)

பள்ளவிளை திடலில்

14—4—55 மாலை 4 மணிக்கு

தலைவர் : எஸ். எம். எஸ். அமீது

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

பி. எம். கண்ணு

பி. வி. இங்கர்சால்

★

சென்னை

பேத்துநாய்க்கன்பேட்டை, காசி விசுவநாதர் கோயில் எதிரில்

18—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : சி. ஆர். பாலசுந்தரம்

பேசுவோர்:

என். வி. நடராசன்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

கொட்டாரம்

14—4—55 மாலை 6 மணிக்கு, கொட்டாரம் தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் ந தங்கவேல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தொ. பிச்சைமுத்து, க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 26-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

14—4—55 இரவு 7 மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழக பணி மனையில் நடைபெறும். பொருள் : புதிய நிர்வாகமும், பொறுப்பேற்றலும்.

‘பரப்பிரம்மம்’—நாடகம்

13—4—55 இரவு 9½ மணிக்கு திருப்பூர், கஜலட்சுமி தியேட்டரில், அறிவொளி நாடக மன்ற வளர்ச்சி நிதிக்காக, மேற்படி மன்றத்தினர் அளிக்கும் ‘பரப்பிரம்மம்’ எனும் நாடகம், தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும்

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

எப். 15: பொதும்பி (மதுரை)

நாஞ்சில் பகுதிகள்

எப். 16: மாலை 4 மணி—குறத்தியறை;
இரவு 7 மணி—தேரூர்

17: காலை 10 மணி—நாகர்கோயில்: நா. மா. தி. மு. கழக செயற் குழு தேர்தல்;
மாலை 4 மணி—கருங்கல்
இரவு 7 மணி—மார்த்தாண்டம்

18: மாலை 4 மணி—முளகுமூடு;
இரவு 7 மணி—பாலராமபுரம்

20: தேவகோட்டை-காலை : திருமணம் ; மாலை : பொதுக்கூட்டம்

21: தணியாமங்கலம்

க. அறிவழகன்

சுற்றுப்பயணம்

எப். 14: கொட்டாரம்

15: திட்டக்குடி

16: ஆதிநாராயணனூர்

17: நெல்விக்குப்பம்

18: கருவேப்பம்பாடி

19: ஆதனூர்

காங்கிரசுக்கு தாண்டன் தலைமுழுக்கு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

“ஒரு காங்கிரஸ் கட்சியினரே கொண்டுவந்த ஒரு குறிப்பிட்ட மசோதாவை விவாதத்திற்கு அனுமதித்துவிட்டு, மசோதாமீது பலமுறை விவாதித்ததற்குப் பின்னர், மனச்சாட்சிப்படி நடந்துகொள்ள மற்ற காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கட்டளையிடுவது—அதுவும் மசோதா சட்டமாக்கப்படும் கட்டத்தில் மேற்படி ஆணையிடுவது முறையா — நியாயமா?” என்பதுதான், புருஷோத்தமதாஸ் தாண்டனின் வினு.

பசு வதையை சட்டமூலம் தடுப்பது என்பது, வெறும் ‘இந்து மத வெறி’ என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை; எனவே மசோதாவின் நோக்கத்தில் கருத்து வேற்றுமை உடையவர்கள், தாண்டனின் மத வெறிப் போக்கை ஒருக்காலும் ஒப்பார்; ஆனல், மக்கள் சபை காங்கிரஸ் கட்சியின் செயல் முறையில் தாண்டன் காணும் ஒழுங்கீனத்தை, அவர் கொள்கைக்கு உடன்படாதவர்களும் ஆதரிப்பர்—அதுவே முறை.

காங்கிரஸ் கொறடாவின் போக்கைக் கண்டித்து, மக்கள் சபை காங்கிரஸ் கட்சிக்கு தலைமுழுக்குப் போட்டுவிட்டார் தாண்டன். தனது 4-ந் தேதிய விலகல் கடிதத்தில், ‘அவ்விலகல் மக்கள் சபையை விட்டே முடிவாகத் தாம் வெளியேறிவிட இருப்பதின் முன்னறிவிப்பு’ எனவும் தாண்டன் அறிவித்துள்ளார்.

தாண்டன் வழியைப் பின்பற்றி, மேலும் சில காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்களும் காங்கிரஸ் கட்சியினரும் கட்சியை விட்டு வெளியேறுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

போர்த்துகீசிய போலீசின் மிதமிஞ்சிய போக்கு!

‘அபாய விளைவு’களை உண்டுபண்ணக் கூடும் என கருத்து நிலவுகிறது

புதுடில்லி, எப். 11—

அனுமதி பெறாமல், கோவா பகுதியிலிருந்து இந்திய எல்லைக்குள் நுழைபவர்களைக் கைது செய்யும்படியும், அதைத் தடுப்பதற்கு அவசியமேற்பட்டால், பலாத்காரத்தை உபயோகிக்கும்படியும், இந்தியா - கோவா எல்லையில் உள்ள அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளதாக இந்திய சர்க்கார் வெளிநாட்டிலாகா உதவி மந்திரி ஏ கே. சந்தா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

* * *

கோவா தேசியக் காங்கிரஸ் தலைவி திருமதி சுதாஜோஷி, கடந்த 6-ந் தேதி முதல் உண்ணு விரதம் இருந்து வருவதாகவும், போர்த்துகீசியப் போலீசாரின் மிருகத்தனமான போக்கை எதிர்த்தே இந்த நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது.

போலீசார் கோவா தலைவர்களைக் கைது செய்து அழைத்துச் செல்கையில் அவர்களைப் பலமாகத் தாக்கியதாகத் தெரிகிறது.

கோவா எல்லைக்குள் போர்த்துகீசிய சர்க்கார் புரிந்துவரும் கொடுமைகளைக் கண்டிக்கும் குறிப்பொன்றை, புது டில்லியில் உள்ள போர்த்துகீசியத் தூதுவரிடம் வெளிநாட்டிலாகா செயலாளர் ஆர். கே. நேரு வழங்கியதாகத் தெரிகிறது.

‘பலாத்காரமேதுமின்றி அறப்போராட்டம் நடத்தும் கோவா நாட்டவர் போலீசாரால் பெருவாரியாகக் கைது செய்யப்பட்டு, விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டு, கொடுமைக்காளாக்கப்படுவது, இந்தியாவில் அபாய விளைவுகளை உண்டுபண்ணக் கூடும்,”

என்று புதுடில்லி அதிகார வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

அழைத்துக் கொள்ளத் தயாராம்!

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வெளியேறிச் சென்ற எல்லா ‘மைனுரிட்டி’ வகுப்பினர்களையும், திரும்ப அழைத்துக்கொள்ளத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் சர்க்கார் அறிவித்துள்ளது

கடந்த சில மாதங்களில் மாதத்திற்கு 25,000 பேர் வீதம் கிழக்கு வங்கத்திலிருந்து அகதிகள் வெளியேறி வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வேண்டுகோள்

“நாஞ்சில் மாவட்ட தி. மு. கிளைக் கழக மாவட்டப் பிரதிநிதிகள் 17—4—55 காலை 10 மணிக்கு நாகர்கோவில், வடசேரி தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுத் தேர்தலில் கலந்து கொள்வதுடன், தேர்தலுக்குப் பின் நடைபெறும் தி. மு. கழக ஊழியர் கூட்டத்தில் கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,”

என்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் கேட்டுக்கொள்கிறார்.

‘கிளர்ச்சி’

எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால் 15—4—55ல் வெளிவர வேண்டிய ‘கிளர்ச்சி’ இதழ் வெளிவராது; அடுத்த இதழ் மே தின இதழாக 1—5—55 அன்று, அதிக பக்கங்களுடன் விலையில் கூடுதலில்லாது வெளிவருகிறதென்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஓவியர் அய்க்கணின் சுற்றுப்பயணம்

தனது தொழில் விஷயமாகவும், மேலும் சில நுணுக்கங்களை கண்டறியவும், ஓவியர் அய்க்கண் பம்பாய் முதலிய இடங்களுக்கு இம்மாதம் 16-ந் தேதி சென்னையைவிட்டுச் செல்ல இருக்கிறார். மே மாதம் முதல் வாரத்தில் சென்னை திரும்புவார்.

உள்நாட்டு டிரங்க் டெலிபோன் பேச்சுக்களின் மொத்த எண்ணிக்கை, 1951 ஜனவரியில் 12,46,000 ஆக இருந்தது—1955-ஜனவரியில் 14,22,000 ஆக அதிகரித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.